3. விதி 111-இன் கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 111 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

5-4-1989 அன்று 1989—90 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, '' அதிலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே45 மாணவர்கள் நேரடியாகவிவசாயிகளுடைய பிள்ளைகள் என்று உள்ள என்னுடைய பதிலைக் கீழ்க்கண்டவாறு திருத்திப் படிக்க வேண்டுகிறேன் :

'' அதிலே வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே 783 மாணவர்கள் மொத்தம். அதிலே 40 இடங்கள் நேரடியாக விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கும், 5 இடங்கள் மீனவர்களுடைய பிள்ளைகளுக்காகவும் ஒதுக்கியுள்ளது.''

4. கவன ஈர்ப்பு.

பாடநூல் வெளியீட்டுக் கழகம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடததால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. .உ ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் நடப்புக் கல்வி ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை முழுமையாக வெளியிடாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் பாடப் புத்தகங்களை முழுமையாக வெளியிடவும் அதனை மாணவர்களுக்கு கிடைக்கச் செய்ய எடுத்த நடவடிக்கை விவரம் பின்வருமாறு:—

1989-90 ஆம் கல்வியாண்டிற்கு 1, 3, 5, 6, 8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கு முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நூல்கள் மறு பதிப்பாக முன்கூட்டியே அச்சிடப்பட்டு பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே விற்பனைக்கு